மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் 11ஆம் நாள் செவ்வாய்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 156/2018 வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. சுப்பிரமணி | வயது | .. 70 |
| த/பெ. | .. கோவிந்தசாமி | சாதி | .. |
| கிராமம் | .. பால்வார்கிரையம் | சமயம் | .. |
| தாலுக்கா | .. | தொழில் | .. |

வா.சா.1 ( குறுக்கு விசாரணை)

1. என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 5 பேர். என் தந்தையாருக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் உள்ளது என்று சொன்னால் 5 ஏக்கர் இருக்கும். அதில் எனக்கு 75 செண்ட் பாகபிரிவினைமூலம் வந்தது. பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் என் தந்தை உயில் எழுதி வைத்து இருந்தார் அதன்மூலம் வந்தது. எந்த வருடத்தில் உயில் எழுதப்பட்டது என்றால் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு தோராயாமாக 1987 ல் எழுதி வைத்தார்.

2. என்னுடன் பிறந்தவர்கள் அனைவருக்கும் தனிதனியாக உயில் எழுதி வைத்து இருந்தார். ஒரே உயிலில் 5 பேருக்கும் என் தந்தை சொத்து பிரித்து எழுதி வைத்தார். என் தந்தைக்கு சொந்தமான 5 ஏக்கர் வெவ்வேறு இடமாக மூன்று இடங்களில் உள்ளது. எனக்கு 2 இடங்களில் உள்ள நிலத்தில் பங்கு வந்தது. எனக்கு வந்த 2 இடங்களில் பிரதிவாதி சகாதேவன் அவர்களுக்கும் பங்கு வந்தது. என்னுடைய தம்பி முனுசாமி அவர்களுக்கும் மேற்கூறிய இரண்டு இடங்களிலும் பங்கு வந்தது. அந்த 2 இடங்களில் கிணற்று பாசனம் தான்.

( வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

Taken down by me in open Court read
over to the witness and acknowledged
by him/her to be correct.

Sdl/-B.Salma
District Munsif.
Polur.